**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.351/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | **அ.சா.4** |
| Name : | **முருகானந்தம்** |
| Father's Name/Husband Name: | **ராஜேந்திரன்** |
| Village : | **துறையூர்** |
| Taluk : | **துறையூர்** |
| Age : | 33/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 14.07.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது துறையூர் கிராமத்தில் வசித்து சிவில் இன்ஜினியரிங் வேலை செய்து வருகிறேன். சம்பவத்தன்று நான் சம்பவயிடத்தில் இருந்த போது அங்கு வந்த போலிசார் அ.சா.1யை எதிரிகள் அடித்தது சம்பந்தமாக வந்திருப்பதாக சொல்லி என்னுடன் இருந்த பிரபாகரன் இருவர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு படம் வரைந்து எழுதி என்னிடமும் என்னுடன் இருந்த பிரபாகரன் என்பவரிடமும் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை தான் போலிசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் ஆமாம். நான் கையொப்பமிட்ட தாளில் என்ன எழுதியுள்ளது

என்று குறிப்பிட்டு என்னால் சொல்லமுடியுமா என்றால் குறிப்பிட்டு சொல்ல முடியாது ஆனால் சம்பவம் நடந்தது பற்றி போலிசார் விசாரணை செய்தார்கள். போலிசார் விசாரணை செய்த தேதி, மாதம் என்ன என்றால் தேதி ஞாபகமில்லை மார்ச் மாதம் 2023ம் வருடம் என்னை விசாரணை செய்தார்கள். அ.சா1. சாந்தி எனது உறவினர் என்றால் சரிதான். நான் சொல்வது போல் போலிசார் சம்பவயிடத்தில் படம் எதுவும் வரையவில்லை என்றாலும் அ.சா.1 எனது உறவினர் என்பதால் காவல் நிலையத்திற்கு என்னை வரவழைத்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல. அதனால் தான் என்னால் தேதியை குறிப்பிட்டு சொல்லமுடியவில்லை என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.